<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS 298/2009</u>**

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் Dw3 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 14.10.2025

Dw3 (சுப்பிரமணி)

**<u>குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)</u>**

எனக்கு எழுத படிக்கத் தெரியாது. வழக்கு எண் எனக்கு தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க பிசா1 மற்றும் பிசா2ம் அழைத்தனர். என்ன வழக்கு, என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என பிரதிவாதிகள் எனக்கு சொன்னார்களா என்றால் இல்லை. தாவா சொத்து செல்வராசுவிற்கு பாத்தியப்பட்டது. செல்வமணி என்பவர் ஜேம்ஸ் வாத்தியாரின் மனைவி. தாவா சொத்து செல்வராசுவிற்கு பாத்தியமா செல்வமணிக்கு பாத்தியமா என்றால் செல்வமணிக்கு தாவா சொத்தில் ஒரு பாகம் உண்டு. செல்வமணி அவரின் சகோதரரிடம் இரண்டு கிரயங்கள் வாங்கினார். ஒரு பாகத்தை ஒரு சகோதரர் கொடுத்தார். எந்த வருடம் செல்வமணி சகோதரரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எவ்வளவுக்கு கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு வடக்கே தங்கவேலுக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது. தாவா சொத்திற்கு தென்புறம் வாரணவாசி கவுண்டரின் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. தங்கவேல் பூமிக்கு வடபுறம் தான் உள்ளது. தங்கவேல் மற்றும் வாரணவாசி கவுண்டரிடம் பணம் வாங்கி தான் 1ம் பிரதிவாதி தனது சகோதரரிடம் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. ஜேம்ஸ் வாத்தியார் மேற்படி நபர்களிடம் பணம் வாங்கவில்லை என்று தன்னிடம் சொன்னதாக கூறுகிறார். தாவா சொத்தை ஒட்டி எனது பூமி மேபுறம் உள்ளது என்றால் சரியல்ல. தென்புறம் உள்ளது. வெள்ளோடு மெயின் ரோட்டிலிருந்து எனது பூமிக்கு நேரடியாக செல்ல தடம் இல்லை என்றால் சரியல்ல. தடம் உள்ளது, அதை நான் கிரயம் பெற்றுள்ளேன். நான் சொல்லும் தடம் 5 அடி அகல தடம் என்றால் சரியல்ல. 8 அடி தடம். 8 அடி தடத்தில் டிராக்டரோ லாரியோ செல்ல முடியாது என்றால் சரியல்ல. 2000ம் ஆண்டில் ஜேம்ஸ் வாத்தியார் மற்றும் செல்வமணி ஆகியோர்கள் என்னிடம் பல முறை கேட்டதாக என எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் அது தவறு. எனது முதல் விசாரணையில் ஜேம்ஸ் வாத்தியார் பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் யாரிடம் எந்த

தேதியில் வாங்கப்பட்டது என சொல்லியுள்ளேனா என்றால் 2 லட்சம் பணம் சதாசிவத்திடம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். ஜேம்ஸ் வாத்தியார் சதாசிவத்திடம் பணம் வாங்கிய விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஜேம்ஸ் வாத்தியார் என்னிடம் பணம் வாங்கி கொண்டு கிரய ஒப்பந்தமோ, கிரய ஆவணமோ எழுதி கொடுத்ததாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. கிரய ஒப்பந்தத்தையோ, கிரய பத்திரத்தையும் பதிவு செய்யததாக என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. நான் எனது நிலத்தை பல ஆண்டுகளாக குத்தகைக்கு விட்டுள்ளேனா என்றால் இல்லை, நான் தான் ஓட்டி வருகிறேன். எனக்கு வெள்ளோடு மெயின் ரோட்டிற்கு கிழபுறம் சுமார் 500 அடி தள்ளி வேறு பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த பூமியில் சாந்தி பிரேம்குமார் மற்றும் சந்திரசேகர் ஆகியோர் அவரது பசுமாட்டை கட்டி வைத்துள்ளனர் என்றால் சரியல்ல. செல்வமணி உயிருடன் இருந்த காலத்தில் கவுண்டச்சிபாளையத்தில் சிஎஸ்ஐ நகரில் புது வீடு 2000 ம் ஆண்டில் கட்டினார் என்றால் அது வழக்கிற்கு முன்பே கட்டிவிட்டார். வீடு கட்டுவதற்கு அவர் வெளி நபரிடம் நிறைய கடன் பெற்றார் என்றால் சரியல்ல. தாவா சொத்து வாங்குவதற்கும் வீடு கட்டுவதற்கும் அவர் வெளியே பல கடன்களை பெற்றார் என்றும் அந்த கடனை தீர்க்க முடியாமல் தான் வாதி செல்வியின் கணவர் சதாசிவத்திடம் பணம் வாங்கி கொண்டு கிரய ஒப்பந்தமும் பின்னிட்டு கிரய பத்திரமும் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதி சொத்தை கிரயம் பெற்ற பிறகு சொத்தில் கம்பி வேலி அமைத்துக் கொண்டிருக்கும்போது வாதியின் சொத்தின் வழியாக 10 அடி அகலத்தில் தடம் ஒன்று கேட்டேன் என்றால் சரியல்ல. அவர் தடம் கொடுக்க மாட்டேன் என்று சொன்னதால் பிரதிவாதிகள் தங்களுக்கு ஆதரவாக வழக்கில் சாட்சியம் அளித்தால் தடம் கொடுப்பதாக சொன்னதால் நான் தற்போது பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பூமியின் சர்வே எண் தெரியாது. எனது பூமியின் சர்வே எண் 669 என்றால் சரியல்ல. எனது சொத்தின் பட்டா எண் 880 என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கொடுக்கப்பட்ட பட்டா கூட்டு பட்டா என்றும், அதில் 29 கூட்டு பங்குதாரர்கள் உள்ளனர் என்றால் சரியல்ல, 12 நபர்கள் தான் உள்ளனர். கந்தசாமி கவுண்டர் மகன் சுப்பிரமணி என்பது என்னை தான் குறிக்கும். அந்த கூட்டுப் பட்டாவில் 23 வது நபர் நான் தான் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அதில் 29 ம் நபர் சதாசிவம் மனைவி செல்வி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2004 ம் ஆண்டே 29 நபர்களின் பெயரை உள்ளடக்கி பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் வாதி செல்வி தென்னை மரங்கள் வைத்து, சோளம், நெல் ஆகியவற்றை பயிர் செய்து வந்தார் என்றால அவர் எப்போதும் காட்டிற்குள் வரவில்லை. 2003 ம் ஆண்டு முதல் 2009 வரை

வாதி தான் நிலவரி செலுத்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. முதல் விசாரணை வாக்குமூலத்தை தயாரித்து கொடுத்தவர் அருள்மணி ஆவார். அவர் தட்டச்சு வேலை செய்து வருகிறார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், பிசா1 மற்றும் பிசா2 சொல்லி தான் அது தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தில் எனக்கு தடம் கொடுப்பதாக உறுதியளித்ததால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.14 17:56:04 -0300

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS